## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி - எட்டாம் பத்து
**(ஸத்யகாமனான எம்பெருமான் திறத்தில் நன்றி அறிவால் கலங்கிக் கைம்மாறாக சமர்ப்பிக்கப் பெற்ற தம் ஆத்ம ஸ்வரூபத்தின் தன்மை உணர்தல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 8-1 - தேவிமாராவார்
**(எம்பெருமான் தமது நினைவைத் தலைக்கட்டாமையால், ஆழ்வார் அவனது ஆஷ்ரித பாரதந்த்ரியம், யாவையும் தானாம் நிலைமை இவைகளைச் சங்கித்துத் தெளிதல்)**

3447 * தேவிமாராவார் திருமகள் பூமி *
ஏவமற்றமரர் ஆட்செய்வார் *
மேவிய உலகம் மூன்றவையாட்சி *
வேண்டு வேண்டுருவம் நின்னுருவம் **
பாவியேன் தன்னை அடுகின்ற கமலக்
கண்ணதோர் * பவளவாய் மணியே! *
ஆவியே! அமுதே! அலைகடல் கடைந்த
அப்பனே! * காணுமாறு அருளாய் 1

3448 காணுமாறு அருளாய் என்றென்றே கலங்கிக் *
கண்ணநீர் அலமர * வினையேன்
பேணுமாறு எல்லாம் பேணி * நின் பெயரே
பிதற்றுமாறு அருள் எனக்கு அந்தோ! **
காணுமாறு அருளாய் காகுத்தா! கண்ணா! *
தொண்டனேன் கற்பகக் கனியே! *
பேணுவார் அமுதே! பெரிய தண்புனல் சூழ் *
பெருநிலம் எடுத்த பேராளா! 2

3449 எடுத்த பேராளன் நந்தகோபன் தன் *
இன்னுயிர்ச் சிறுவனே! * அசோதைக்கு
அடுத்த பேரின்பக் குலவிளங்களிறே! *
அடியனேன் பெரிய அம்மானே! **
கடுத்த போர் அவுணன் உடல் இருபிளவாக் *
கையுகிர் ஆண்ட எங்கடலே! *
அடுத்ததோர் உருவாய் இன்று நீ வாராய் *
எங்ஙனம் தேறுவர் உமரே? 3

3450 உமருகந்துகந்த உருவம் நின் உருவமாகி *
உன்தனக்கு அன்பரானார் *
அவர் உகந்தமர்ந்த செய்கை உன் மாயை *

அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் **
அமரது பண்ணி அகலிடம் புடை சூழ் *
அடுபடை அவித்த அம்மானே! *
அமரர் தம் அமுதே! அசுரர்கள் நஞ்சே! *
என்னுடை ஆருயிரேயோ! 4

3451 ஆருயிரேயோ! அகலிடம் முழுதும் *
படைத்திடந்து உண்டுமிழ்ந்து அளந்த *
பேருயிரேயோ! பெரிய நீர் படைத்து *
அங்குறைந்து அது கடைந்து அடைத்துடைத்த **
சீரியரேயோ! மனிசர்க்குத் தேவர் போலத் *
தேவர்க்கும் தேவாவோ! *
ஒருயிரேயோ? உலகங்கட்கு எல்லாம் *
உன்னை நான் எங்கு வந்துறுகோ? 5

3452 எங்கு வந்துறுகோ? என்னை ஆள்வானே! *
ஏழுலகங்களும் நீயே *
அங்கு அவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே *
அவற்றவை கருமமும் நீயே **
பொங்கிய புறம்பால் பொருள் உளவேலும் *
அவையுமோ நீ இன்னேயானால் *
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே *
வான்புலன் இறந்ததும் நீயே 6

3453 இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே *
நிகழ்வதோ நீ இன்னேயானால் *
சிறந்த நின் தன்மை அதுவிதுவுது என்று *
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் **
கறந்த பால் நெய்யே! நெய்யின் இன்சுவையே! *
கடலினுள் அமுதமே! * அமுதில்
பிறந்த இன்சுவையே! சுவையது பயனே! *
பின்னைதோள் மணந்த பேராயா! 7

3454 மணந்த பேராயா! மாயத்தால் முழுதும் *
வல்வினையேனை ஈர்கின்ற *
குணங்களை உடையாய்! அசுரர் வன்கையர்
கூற்றமே! * கொடிய புள்ளுயர்த்தாய்! **
பணங்கள் ஆயிரம்[1] உடைய பைந்நாகப்
பள்ளியாய்! * பாற்கடல் சேர்ப்பா! *
வணங்குமாறு அறியேன் மனமும் வாசகமும் *
செய்கையும் யானும் நீ தானே 8

---

[1] ஆயிரமும்

3455 யானும் நீ தானே யாவதோ மெய்யே *
அருநரகவையும் நீயானால் *
வானுயர் இன்பம் எய்திலென்? * மற்றை
நரகமே எய்திலென்? எனிலும் **
யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்
அஞ்சுவன் * நரகம் நானடைதல் *
வானுயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்! *
அருளு நின் தாள்களை எனக்கே 9

3456 தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்
தந்த * பேருதவிக் கைம்மாறா *
தோள்களை ஆரத் தழுவி * என்னுயிரை
அறவிலை செய்தனன் சோதீ! **
தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்! *
துணைமலர்க் கண்கள் ஆயிரத்தாய்! *
தாள்கள் ஆயிரத்தாய்! பேர்கள் ஆயிரத்தாய்! *
தமியனேன் பெரியவப்பனே! 10

3457 * பெரியவப்பனைப் பிரமனப்பனை *
உருத்திரனப்பனை * முனிவர்க்கு
உரியவப்பனை அமரரப்பனை *
உலகுக்கோர் தனியப்பன் தன்னை **
பெரிய வண்குருகூர் வண்சடகோபன் *
பேணின ஆயிரத்துள்ளும் *
உரிய சொல்மாலை இவையும் பத்து இவற்றால் *
உய்யலாம் தொண்டீர்! நங்கட்கே 11

**அடிவரவு:** தேவி காணும் எடுத்த உமர் ஆருயிர் எங்கு இறந்த
மணம் யானும் தாள் பெரிய நங்கள்